# கடலூர் மாநகராட்சி

## 09.05.2025 அன்று நடைபெற்ற பகுதி சபா கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பகுதிசபா உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்களிடம் பெறப்பட்ட கோரிக்கைகள் விவரம்.

| வார்டு எண் | கோரிக்கைகள் |
|---|---|
| 5 | 1) பட்டா இல்லாத வீடுகளுக்கு பட்டா வழங்கப்பட வேண்டும்<br>2) புருஷோத்தமன் நகரில் பொதுக்கழிப்பறை அமைக்கப்பட வேண்டும்<br>3) இந்த வார்டு பகுதிகளில் உள்ள முள்காடுகளை அழிக்க வேண்டும்<br>4) இந்த வார்டு பகுதியில் சாலை வசதி இல்லாத பகுதிகளில் வடிகால்வாயுடன் கூடிய சாலை வசதி அமைக்கப்பட வேண்டும்.<br>5) அரசு சேவை இல்லத்தில் உள்ள மரங்களில் உள்ள கிளைகளை அகற்ற வேண்டும்<br>6) ரெட்கிராஸ் தெருவிற்கு வடிகால் வாய்க்காலுடன் சிமெண்ட் சாலை அமைக்கப்பட வேண்டும்.<br>7) ராஜாம்பாள் நகர் இரண்டாவது குறுக்குத் தெருவில் பாதாள சாக்கடை குழிகளுக்கான மூடிகள் சரியில்லாமல் இருப்பவற்றை சீர்செய்ய வேண்டும்.<br>8) நியாய விலைக்கடையை புதுப்பிக்க வேண்டும். |
| 20 | 1) ராமசாமி சந்தில் போடப்படாமல் உள்ள 50 மீட்டர் சாலை அமைத்து தரப்பட வேண்டும்.<br>2) படவட்டம்மன்கோவில் தெருவிற்கு சாலை வசதி வேண்டும்<br>3) பொன்னன் தெருவில் மின்விளக்கு வசதி ஏற்படுத்தி தர வேண்டும்– 7 எண்ணிக்கை கம்பங்கள் நடப்பட வேண்டும்.<br>4) வாரம் ஒருமுறையாவது சாக்கடைகளை சுத்தம் செய்ய வேண்டும்<br>5) அருணகிரி தெரு, பொன்னன் தெரு, படவட்டம்மன் கோவில் தெருக்களில் 6 சிறுபாலங்கள் அமைக்க வேண்டும்<br>6) பொன்னன் தெரு (மார்க்கெட் அருகில்) ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்<br>7) ராமதாஸ் தெருவில் உள்ள சுகாதார நிலையம் அருகில் வேகத்தடை அமைக்கப்பட வேண்டும்.<br>8) இந்த வார்டில் கருமகாரிய கூடம் அமைக்க வேண்டும் |

| | |
|---|---|
| | 9) ராமசாமி தெருவில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்து வருகிறது. அதனை சரிசெய்ய வேண்டும்.<br>10) தெருக்களில் திரியும் நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட வேண்டும். |
| 38 | 1) மோகன் தெருவில் உள்ள பங்களா சந்து பின்புறம் பொதுக்கழிப்பிடம் சீரமைத்து தர வேண்டும்.<br>2) பென்ஷனர் தெருவில் உள்ள பொதுக்கழிப்பிடம் சீரமைக்க வேண்டி<br>3) பனங்காட்டு காலனி உள்ள பொதுக்கழிப்பிடம் சீரமைக்க வேண்டி மூன்று வருடங்களாக மனு கொடுத்தும் இதுவரை செய்யவில்லை.<br>4) பனங்காட்டு காலனியில் மழைநீர் வடிகால் அமைக்க மூன்று வருடங்களாக கோரிக்கை வைத்தும் இதுவரை செய்யவில்லை. இதனால் மழைக்காலங்களில் வீடுகளில் உள்ளே மழைநீர் புகுந்து பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இது உடனடியாக சரிசெய்து தரப்பட வேண்டும்.<br>5) பனங்காட்டு காலனியில் சமுதாயக் கூடம் அமைத்து தர வேண்டும்<br>6) பனங்காட்டு காலனியில் பழுதாகியுள்ள அங்கன்வாடி மையத்தை சீரமைத்து தர வேண்டும்.<br>7) காமாட்சி நகர் மற்றும் கோவலன் தெரு ஆகிய தெருக்களில் குடிநீர் குழாய் மிகவும் பழுதடைந்துள்ளதால் உடனே மாற்றித்தரப்பட வேண்டும். |